# ஓடிவிளையாடு பாப்பா 7

ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா



பொய் சொல்லக் கூடாது பாப்பா - என்றும்
புறஞ் சொல்லலாகாது பாப்பா
தெய்வம் நமக்குத் துணை பாப்பா ஒரு
தீங்கு வரமாட்டாது பாப்பா

சின்னஞ் சிறு குருவி போலே - நீ
திரிந்து பறந்து வா பாப்பா
வண்ணப்பறவைகளைக் கண்டு - நீ
மனதில் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா

**சுப்பிரமணியபாரதியார்.**



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

### பாடலில் வந்த சில சொற்களும் பொருளும்

| | | |
|---|---|---|
| ஓய்ந்திருத்தல் | - சோம்பலாக இருத்தல் | - විවේකව සිටීම |
| கூடி விளையாடுதல் | - சேர்ந்து விளையாடுதல் | - එකට සෙල්ලම් කිරීම |
| வையாதே | - ஏசாதே | - බනින්න එපා |
| படிப்பு | - கல்வி | - අධ්‍යාපන |
| கனிவு | - இதம் | - මෘදු ගුණය |
| வழக்கப்படுத்திக் கொள்தல் | - தினமும் செய்தல் | - දිනපතා කිරීම |
| புறஞ் சொல்லுதல் | - கோள்சொல்லுதல் | - කේලම් කීම |
| தெய்வம் | - கடவுள் /இறைவன் | - දෙවියා |
| துணை | - அருள் | - පිහිට |
| தீங்கு | - தீமை | - පව |
| திரிந்து | - சென்று | - ගිහින් |
| மனம் | - உள்ளம் | - සිත |

**கிரகித்தற் பயிற்சி අභ්‍යාසය**

1. கவிஞர் யாரை விளையாட அழைக்கின்றார்?
4. எப்போது படிக்க வேண்டும் என்று பாடலில் கூறப்படுகின்றது?
5. கவிஞர் விளையாடும் நேரமாக எதைக்குறிப்பிடுகின்றார்?
6. சொல்லக் கூடாதவை எவை?
7. எமக்குத் துணை செய்பவர் யார்?
8. யாரைப் போலத் திரிந்து பறக்க வேண்டும்?
9. எவற்றைக் கண்டால் மனதில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது?
10. இப்பாடலைப் பாடிய கவிஞர் யார்?

## செயற்பாடு I

01. இப்பாடலை ஆசிரியரின் உதவியுடன் தனியாகவும், குழுவாகவும் இசையுடன் பாடுங்கள்.

02. இப்பாடலைப் பார்த்து உறுப்பமைய எழுதுங்கள்.

03. எமக்கு உதவும் நல்ல பழக்கவழக்கங்கள் எவை?



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

| **ஆண்பால்** | **பெண்பால்** |
|---|---|
| • அரசன | • அரசி |
| • தம்பி | • தங்கை |
| • மாமா | • மாமி |
| • அம்மா | • அப்பா |
| • சிறுவன் | • சிறுமி |

## செயற்பாடு III

**ஆண்பாற் சொற்களைப் பெண்பாற் சொற்களாக மாற்றுங்கள்.**
**පුරුෂලිංග පද ස්ත්‍රී ලිංග පදයට හරවන්න.**

1) சிறுவன் விளையாடுகிறான்.

------------------------------------------------------------------------------------

2) அவன் ஒரு விளையாட்டு வீரன்.

------------------------------------------------------------------------------------

3) செல்வன் என் சகோதரன்.

------------------------------------------------------------------------------------

4) பாடகன் பாட்டுப் பாடினான்.

------------------------------------------------------------------------------------

5) நடிகன் நாடகத்தில் நடிப்பான்.

------------------------------------------------------------------------------------

## செயற்பாடு IV

பின்வரும் சொற்களை அட்டவணைப்படுத்துக.
පහත සඳහන් වචන වගුගත කරන්න.

சிறுவன், பாடகன், பாடகி, அவன், வீரன், அரக்கி, அரசி, பாட்டி, ஆசிரியை, சகோதரன், நடிகன், பாடகி, பாட்டி, நன்பன், தலைவி, அவன், தலைவன், வேலைக்காரி, அண்ணர், மாமா


இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக

| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

## செயற்பாடு V

**திணை, பால், என்பனவற்றைக் குறிப்பிடுங்கள்.**

මානව, මානව නොවන හා ලිංග භේදය සටහන් කරන්න.

| **சொற்கள்** | **பால்** | **திணை** |
|---|---|---|
| அரசன் | | |
| மீனா | | |
| வீரர்கள் | | |
| விலங்கு | | |
| மாணவன் | | |
| தாமரை | | |
| மலர்விழி | | |
| பூங்கோதை | | |
| நண்பர்கள் | | |
| பூட்டு | | |



இலவசப்பாடநூல் விநியோகத்திற்காக